ஸ்ரீ காந்தா அச்சக இலவச வெளியீடு:
29-6-69 நாவலர் சிலை விழா.

உ

சிவமயம்

யாழ்ப்பாணத்து — நல்லூர்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்

பாடிய

கதிர்காமத் திருமுருகன்

கீர்த்தனங்கள்

ஸ்ரீகாந்தா அச்சகம் — புத்தகசாலை

யாழ்ப்பாணம்

உ

சிவமயம்

யாழ்ப்பாணத்து — நல்லூர்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்

பாடிய

கதிர்காமத் திருமுருகன்

கீர்த்தனங்கள்

ஸ்ரீகாந்தா அச்சகம் — புத்தகசாலை

யாழ்ப்பாணம்

வரலாறு

யாழ்ப்பாணத்து வண்ணை நகரிலே நாவலர் காலத்திலே சின்னத்தம்பிச் செட்டியார் குமாரர் விநாயகமூர்த்திச் செட்டியார் என்று ஒருவர் இருந்தார். அவர் உபாத்தியாயர்: சங்கீதப் பயிற்சியும் உடையவர். அவருக்கு முப்பதாம் வயசில் இருமலோடு கூடிய ஒருவகைக் காசநோய் உண்டானது. வைத்தியங்கள் பயன்செய்யவில்லை. வடக்கே பல தலங்களுக்கு யாத்திரைசெய்து, பின் ஊருக்குவந்து, கதிரை யாத்திரை செய்தார். வழியில் எதிர்ப்படுந் தலங்களையெல்லாந் தரிசித்துக்கொண்டு, கதிர்காமத்தை அடைந்து முறைப்படி தீர்த்தமாடி முருகன் சந்நிதியை அணைந்து, அங்கே குழுமியிருந்த புலவர்கள் முன்னிலையில் ஆறுமுகநாவலர் அவர்கள் பாடிக்கொடுத்த கீர்த்தனங்களை இசையுடன் பாடி அரங்கேற்றினார். மங்களம் பாடியவுடன் கற்பகனார் திருநீறு ஆதியன கொடுத்து ஆசீர்வதித்தார். செட்டியாருக்குப் புதியதொரு உணர்ச்சி உண்டானது. பதினைந்துநாள் அங்கே தங்கிக் கதிரை முருகன் விழாவைத் தரிசனஞ் செய்தார்.

"மாற்றருங் காசமும் வருத்திடுமிருமலும்
பாற்கரன் றன்முனம் பனியெனப் பறந்திட
ஆடினன் பாடினன் அகமகிழ் வெய்தினன்"

செட்டியார் இருபத்தைந்து வயசுச் செட்டியார் ஆயினார். அதன்பிறகு யாழ்ப்பாணத்துக்கு வந்து நல்லூர்க் கந்தசுவாமியைத் தரிசித்துத் தாம் யாத்திரைசெய்து நோய்நீங்கிய சம்பவத்தை, ஒருவகை அகவலில் கதிரை யாத்திரை விளக்கம் எனப் பெயர்தந்து ஒருநூல் செய்து வெளியிட்டார். விளக்கத்தின் உள்ளிடு மணிகளாய்க் கீர்த்தனங்கள் ஒளிசெய்துகொண்டிருக்கின்றன. மங்களம் உட்படக் கீர்த்தனங்கள் ஆறு. அவை இப்புத்தகத்தில் வருபவை. நிற்க.

மிக நீண்டதொரு அகவற் பாவாலான சிறப்புப் பாயிரம் கதிரையாத்திரை விளக்கம் என்ற நூலுக்குச் சிறப்புச் செய்கின்றது. மேற்காட்டிய மூன்றடிகளும் அப்பாயிரத்தில் உள்ளவை. பாயிரஞ்செய்தார் நாவலர் அவர்களின் தமையனார் பரமானந்தப் புலவர். இப்புலவர் நல்லூர்க் கந்தசுவாமிமீது செய்த முப்பத்திரண்டு கீர்த்தனங்கள் கதிரையாத்திரை விளக்கத்துக்கு அநுபந்தமாய் அமைந்திருக்கின்றன.

திருநெல்வேலி; பண்டிதமணி. சி. கணபதிப்பிள்ளை

நாவலர்
கதிர்காமசுவாமி மீது
பாடிய
கீர்த்தனங்கள்

இராகம் - சாவேரி, தாளம் - ஆதி.

பல்லவி

உன்னிருபாதந் தெரி - சனஞ்செய்த பின்னரே
யுவகைக்கடலு - லாழ்ந்தேனே.

அநுபல்லவி

தன்னிகரில் கதிரை - தனில்வாழும் போதனே
சற்குணய பரிபூரண - சண்முக நாதனே (உன்)

சரணங்கள்

ஆதி நடுவிறுதி நீங்கினோய் - சித்தோ
டசித்தாம் பிரபஞ்சமுற்றுந் - தாங்கினோய்
சோதிவடிவாய் நின்ற சூலபாணி புதல்வா
சூரனாதி மூவரைத் தொலைத்தருளும் முதல்வா (உன்)

சனன மரணத்துயரத் தாழ்கின்றேன் - இன்னுஞ்
சஞ்சலச் சாகரத்துள் வீழ்கின்றேன்
இன்னமும் பாராமுகஞ் செய்யா தெனக்குருகுவா
யேதிலாத முத்தி யின்பந் தருகுவாய் (உன்)

அருளுங்கருணைக் கடலல்லையோ - முன்ன
ரமரரிட ரகற்ற வில்லையோ
ஒருவிலெனது நோயை யோட்டுத லருமையா
உன்னையே நம்பிவந்தேனுக் குருகாமை பெருமையா. ()

இராகம் - துசாவந்தி, தாளம் - சாபு.

பல்லவி

ஏனிந்தக்கேடு நெஞ்சே - ஐயையோ - உனக்
கேனிந்தக்கேடு நெஞ்சே.

அநுபல்லவி

மோனந்திகழுஞ் சைவ - முனிவருறை கதிரை
முருகா - முருகா - முருகாவென் றுருகிலை (ஏனிந்த)

சரணங்கள்

பொய்யாமுலக வாழ்வை நீங்கி - நித்திய
பூரணானந்த வாழ்விற் றேங்கி

மெய்யா மறிவானந்த - வேதமுடிவாய் நின்ற
விமலா - விமலா - விமலா வென்றுருகிலை (ஏனிந்த)

சனன மரணத் துயர் தீரு - மது
தாளையமரு நிலை சாரும்

கனகசபை நடனக் கருணைகரன் முன்றந்த
கந்தா - கந்தா - கந்தாவென் றுருகிலை (ஏனிந்த)

அங்கியிடை மெழுக தென்னக் - கசிந்
தளவிலானந்த மிகத்துன்ன

கொங்கு கமழ் கடம்பு குல்லையொடு புனைந்த
குகனே - குகனே - குகனேயென் றுருகிலை (ஏனிந்த)

இராகம் - சுருட்டி, தாளம் - ஆதி.

பல்லவி

நிருமல பரசிவசண்முகா - சுத்த
நித்திய - சத்திய - வித்தகனுங்குக

அநுபல்லவி

திருவுலாவு மிலங்கையின் மேவிய
சீர்திகழுங்கதிர் காமத்துறைதரு

சிற்பரா - அருள் தற்பரா - அன்பர்
சிந்தையுகந் தமருந்தனி வேலனே (நிரு)

சரணங்கள்

பரமனருளும் புதல்வா - பரமானந்தசிவ
பத்தர்க்கருளு முதல்வா

கருணைசேர் சச்சிதானந்த வடிவே
கணிப்பிலாச்சது மறையின் முடிவே
கந்தனே - உமை மைந்தனே - என்னைக்
காத்து மலவிருள் தீர்த்தினிதாளுவாய் (நிரு)

அறிவுக்கறிவாய் நின்றவா - கிரௌஞ்சகிரியுடன்
அவுணர்கிளையைக் கொன்றவா

குறிகுண மிறந்திலகு முருகா
கூர்ந்துளாயணி மருமன் மருகா
கோலனே - புரிநூலனே - ஒற்றைக்
கொம்பினன் பின்வரு தம்பியே யின்பருள் (நிரு)

அயனைச் சிறையில்வைத்தவா - அகத்தியமுனிவனுக்
கருளோடுப தேசித்தவா

வியனுலகமரருக் கருள் தாளா
வின்னுதல் வள்ளிக்கொடி புணருந் தோளா
மெய்யனே - எமதையனே - அர
விந்தமலர் நிகரும்பாதந் தந்தருள் (நிரு)

இராகம் - ஆகிரி, தாளம் - சாபு.

பல்லவி

இத்தனை கொடு வேதனைப்படல் கண்டுமுமக்
கின்னு மிரக்க மில்லையா

அநுபல்லவி

சித்தி முத்திகடருந் தெய்வ மாணிக்க நதி
சேருங் கதிரை நகர் - திகழ் சுப்பிரமணியரே நான் (இ)

சரணங்கள்

அண்டரிடரகற்றும் போதரே - அன்பர்
அனவரதம் பணி பொற் பாதரே
கண்டங்கரிய சோதி காதலரே யெனது
கண்ணேயென் கண்மணியே காருண்ய சாகரமே (இத்)

எள்ளினெய் போலெங்கும் நிறைவீரே - உமக்
கென்றுயர் தெரியாதோ அறைவீரே
தெள்ளுந் தமிழால் வைதார் தமக்கு மருள்வீரென்று
தீதிலருணகிரி தேவர்சொல் நம்பிவந்தேன் (இத்)

உம்மையல்லாது துணை யறியேனே - துய
ரோட்டிலீரேனு மும்மைப் பிரியேனே
இம்மை மறுமை வீடு மூன்று மும்மாலே யாகும்
இதுவே சத்தியஞ் சத்தியமென்று துணிந்து வந்தேன்()

இராகம் - கல்யாணி, தாளம் - ரூபகம்

பல்லவி

என்மே லிரக்கமில்லையா சாமி-புதல்வனுக்குத் தந்தை
இரங்கா திருந்தா லென்சொல்லும் பூமி

அநுபல்லவி

தன்னிகரில்லாக் கதிரைமலை வாழுந்
தற்பரானந்த சாமி சுகாரம்ப
வுன்னுபய சரணம்புய மல்லாம
லொன்றும்புக லிடமின்றினியாகுதல் (என்)

சரணங்கள்

துய்யசடட்சரத்தோ ரெழுத்தையுஞ்
சொல்லிலே னென்செய்வேன் சிறியேன்
கோடி சூரியப் பிரகாசமான வரோதய சுவாமி
உய்வகையறியேன் செய்யநின் னுமத்தை நினையேன்
பவந்திரா துலைகின்றேன் வினையேன்
அன்னை தெய்வமு நீயே அடியேனுக்குய் வருள்வாயே
அருள்சேர் சீலா - பாலா கோலா
நல்லனு கூலா - செங்கதிர்வேலா - இன்னும் (என்)

நித்தியபரி பூரணானந்த நிருமலா
நீதமுருகா பாம்பில் நிருத்தம் புரியும்
பரந்தாமனுக்கு நிகரில்லாத நன்மருகா
துத்திய வள்ளி மணாளா பல தொண்டர் வணங்கிடு
என்மேற் சூதை யெண்ணாதே [தாளா
என்னையிந்த வாதை பண்ணாதே
கனமிகு துய்யா - மெய்யா - பொய்யா
பன்னிருகையா - அய்யா - செய்யா - இன்னும் (என்)

ஆறுமுகவென் றழைக்குங் கீரனுக்
கருள்புரிந்திடு முதல்வா

அனவரதமுந் துதிசெயுந்திரி யம்பகற்கொரு புதல்வா
சீறுமவுணனை வென்றாய் குறத் தேவிமுன் வேங்கை
நின்மேற் சிந்தனைவையே [யாய் நின்றாய்
னொருக்காலும் வந்தனை செய்யேன்

கன ஈழதேசா - ராசா - விலாசா
நல்லையில் - வாசா - நேசா - ஈசா - இன்னும் (என்)

இராகம் - அசாவேரி, தாளம் - ஆதி

பல்லவி

சிவ குரு நாதருக்குச் செய மங்களம் - நல்ல
செங்கமல பாதருக்குச் செய மங்களம்

அநுபல்லவி

பவமறுத் தெனையாளும் பன்னிரு தோளருக்கு
தவமுனிவர்களுளந் தங்கருளாளருக்குச் (சிவ)

சரணங்கள்

கன்னி வள்ளிநேசர் பாவ நாசருக்கு மங்களம்
கதிர்காமவேல ரீழ தேசருக்கு மங்களம்
மன்னுமடியார்க் கருளு மாசில் குமரேசருக்கு
துன்னிய வனந்தகோடி சூரியப் பிர காசருக்குச் (சிவ)

மங்கையுமை பாலர் வடி வேலருக்கு மங்களம்
மன்னுமறை நூலரனு கூலருக்கு மங்களம்
புங்கமிகு சிவகாம போதக சுசீலருக்குச்
செங்கையில் விளங்குவளைத் தெய்வயானை லோலருக்குச் ()

சங்கரன் குமாரர்குல்லைத் தாரருக்கு மங்களம்
தன்னிக ரில்லாதநல் லூரருக்கு மங்களம்
பொங்குசினத் தவுணரைப் போரில்வென்ற வீரருக்குத்
துங்கவகத் தியற்கருள் தோமிலதி தீரருக்குச் (சிவ)

எமது அடுத்த வெளியீடுகள்:

உரையுடன் வெளிவருகின்றன

1. சிவராத்திரி புராணம்
   திரு. ம. குமாரசூரியப்பிள்ளை அவர்கள்
   இயற்றிய உரையுடன்

2. கந்தபுராணம் உற்பத்தி காண்டம்

3. கந்தபுராணம் அசுரகாண்டம்

4. கந்தபுராணம் மகேந்திரகாண்டம்
   சிவஸ்ரீ ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள்
   இயற்றிய உரையுடன்

பதிப்பாளர்:

ஸ்ரீ காந்தா அச்சகம் - புத்தகசாலை
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

அச்சிட்டுப் பிரசுரித்தவர்: மு. கணபதிப்பிள்ளை
ஸ்ரீ காந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.